**சக்கராம்பாளையம், அகரம் அஞ்சல்,**
**எலச்சிப்பாளையம், திருச்செங்கோடு வட்டம்,**
**நாமக்கல் மாவட்டம் - 637 202.**
**CELL : 99655-31727, 94432 – 31727.**

## அரையாண்டு பொதுத்தேர்வு, டிசம்பர் - 2018
## பொதுத்தமிழ் விடைக்குறிப்புகள்

**வகுப்பு – 11** **மதிப்பெண் :90**

### பகுதி - அ
### (செய்யுள், உரைநடை)

**I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6x1=6**

1. i) அ, ஆ, இ - சரி, ஈ - தவறு
2. ஆ) அண்ணாமலையார்
3. ஆ) ஒரு வராகன்
4. ஈ) சொல்லிசையளபெடை, வினைத்தொகை
5. அ) புதுமைப்பித்தன்
6. ஈ) சீர்மோனை, அடிமோனை

**II. (அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.) 3x2=6**

**7. எப்போது மருந்து தேவை இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார்?**

❖ ஒருவன் தான் முன் உண்ட உணவு செரித்ததை அதற்குரிய அடையாளங்களால் நன்கு அறிந்து பின் உண்ண வேண்டும்.

❖ அத்தகையவனுக்கு மருந்து தேவை இல்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**8. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு**
**கொடையில் கொட்டும் பூக்களை**
**எண்ணச் சொல்கிறார்கள்**
**எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?**

❖ எண்ணச் சொல்கிறவர், ஆசிரியர்

❖ எண்ணுபவர்கள், மாணவர்கள்

ஸ்ரீ வித்யபாரதி

9. **சின்னச்சீறா விளக்குக.**

- ❖ சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர் ஆவார்.
- ❖ நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் பனுஅகமது மரைக்காயர் இதைப் பாடி முடித்தார்.
- ❖ இவர் பாடிய பகுதி சின்னச்சீறா என்று அழைக்கப்படுகிறது.

10. **காவடிச்சிந்து என்பது யாது?**

- ❖ முருகப்பெருமானுக்கு அவன் அடியார்கள் காவடி எடுத்துச் செல்லும் பொது அன்பர்களால் பாடப்படும் பாடல்கள் காவடிச்சிந்து ஆகும்.
- ❖ இவை சிந்து என்னும் இசைப்பாடல்களால் ஆகிய நூலாகும். இதில் 22 இசைப் பாடல்கள் உள்ளன.

**(ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக.) 2x2=4**

11. **தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.**

- ❖ தமிழ்நாட்டின் மாநில மரம், பனை மரம்.
- ❖ அது சிறந்த காற்றுத் தடுப்பான்.
- ❖ அது நிலத்தடி நீர்மட்டம் குறையாது காக்கும்.
- ❖ அம்மரத்திலிருந்து பதநீர், நுங்கு முதலியன கிட்டுகின்றன.
- ❖ அவற்றைக்கொண்டு கருப்பட்டி, பனங்கற்கண்டு தயாரிக்கப்படுகின்றன.

12. **ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

- ❖ "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர் பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்".

13. **கற்றளி கோயில்கள் யாவை?**

- ❖ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதைப் போல, கருங்கற்களை அடுக்கிக் கட்டும் கோவில் கற்றளிக் கோவில் எனப்படும்.
- ❖ இஃது ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவமாகும்.
- ❖ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியன கற்றளிக் கோவில்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.
- ❖ முழுமையாகக் கற்களைக்கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கற்றளிக்கோவில் தஞ்சைப் பெரியகோவிலே ஆகும்.

ஸ்ரீ வித்யபாரதி

**III. (அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.) 2x4=8**

**14. "நின் புண்ணியம் அனைத்தும் உதவுக" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** இத்தொடர், 'வில்லி பாரதம்' என்னும் நூலில், கண்ணன் கன்னனை நோக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. கண்ணன், போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் ஈகைத் திறனைக் கொடையாகக் கோரும்போது, 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக' என்று கூறினார்.

**பொருள்:** உன்னுடைய புண்ணியம் அனைத்தையும் எனக்குத் தந்து உதவுக.

**விளக்கம்:** அர்ச்சுனனின் அம்புகளால் உடல் தளர்ந்து தேரின்மீது தளர்ந்து விழும் நிலைமையிலிருந்த போது, 'என்னால் தரத் தகுந்த பொருளை நீர் உரைப்பீர்' எனக் கேட்க, 'நீ செய்த புண்ணியம் அனைத்தும் எனக்கு அளித்து உதவுக' என்று கண்ணன் கேட்டார்.

**15. ஒலி ஒளி ஆகியவைபற்றி நீலகேசி தரும் அறிவியல் செய்தி யாது?**

- ஒலியும் ஒளியும் ஒரே காலத்தில்தான் தோன்றுகின்றன.
- ஆனால், நாம் அவற்றை ஒரே சமயத்தில் பெறுவதில்லை.
- ஒளியை முதலில் காண்கிறோம்; ஒலியைப் பின்பே கேட்க நேருகிறது.
- ஒலி, செவியினை வந்து சேர்வதற்கு அதிகக் காலம் எடுத்துக்கொள்கிறது.

இவையே ஒலி, ஒளி பற்றி நீலகேசி தரும் அறிவியல் செய்தி.

**16. முல்லைத் திணையை விளக்குக.**

**முதற்பொருள்**

நிலம் : காடும் காடு சார்ந்த இடமும்

**பொழுது :**

சிறுபொழுது : மாலை

பெரும்பொழுது : கார்காலம்

**கருப்பொருள்:**

தெய்வம் : திருமால்

மக்கள் : ஆயர், ஆய்ச்சியர்

பறவை : கானக்கோழி

விலங்கு : முயல், மான்

ஊர் : பாடி, சேரி

நீர் : கானாறு

பூ : முல்லை, தோன்றி

| | | |
|---|---|---|
| மரம் | : | கொன்றை, காயா |
| உணவு | : | வரகு, சாமை |
| பறை | : | ஏறு கோட்பறை |
| பண் | : | முல்லைப்பண் (சாதாரி) |
| யாழ் | : | முல்லையாழ் |
| தொழில் | : | வரகு விதைத்தல் ஆநிரை மேய்த்தல் |

**உரிப்பொருள்:**

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

**சான்று**

❖ 'காயா கொன்றை நெய்தல் முல்லை' – எனத்தொடங்கும் பேயனார் பாடிய ஐங்குறுநூற்றுப்பாடல்

**திணைப் பொருத்தம்**

❖ பெரிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்ற தலைவன் தன் தலைவியை அழைக்கிறான். இவ்வாறு தலைவியை அழைப்பதாக அமைந்த இப்பாடலில் முல்லைத்திணைக்குரிய முதற், கரு, உரிப்பொருள் பயின்று வந்துள்ளமையால் இப்பாடல் முல்லைத் திணைக்குப் பொருத்தமாக அமைகிறது.

**(அல்லது)**

**பாடாண் திணையை விளக்குக.**

**பாடாண்திணை** :

பாடு + ஆண் + திணை . பாடப்படும் ஆண்மகனின் ஒழுக்கமாகும். அஃதாவது, ஒருவர் புகழ், வளமை, அருள், கொடை, வீரம் வெற்றி முதலியவற்றைப் போற்றிப் புகழ்வது பாடாண்திணை ஆகும்.

**சான்று:**

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்

**எனத்** தொடங்கும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் இயற்றிய புறநானூற்றுப் பாடல் இத்திணைக்குச் சான்றாக அமைகிறது.

**சான்று விளக்கம்:**

செந்நிறக் கதிர்களைக் கொண்ட கதிரவன் செல்லுகின்ற வீதியையும் இத்தனை நாழிகைக்கு இத்தனை யோசனை தூரம் செல்லும் என்னும் அதன் இயக்கத்தையும், அவ்வியக்கத்தால் ஒளி பரவும் நிலவுலக வட்டத்தினையும், காற்று இயங்குகின்ற திசையினையும், எந்த வித ஆதாரமும் இன்றி உயரே

விரிந்து ஆகாயத்தினையும், அங்கங்கு போய் அளந்து அறிந்தவா்களைப் போல, நாளும் இத்தனை அளவை உடையனவென்று சொல்லும் கல்வியினை உடையோரும் உள்ளனா்.

**திணைப் பொருத்தம்:**

**"களிறுகவுள் அடுத்த எறிகல் போல**
**ஒளித்த துப்பினை ஆதலின் வெளிப்பட"**

அத்தகைய கல்வியறிவுடையோராலும் அறிய இயலாத அடக்கம் உடையவன் ஆவாய் நீ போா்யானை, போருக்குச் செல்லுமுன், போா்க்களத்தில் பகைவா்மீது வீசித் தாக்கப் பயன்படும் கல்லைப் பிறா் அறியாவாறு தன் கன்னத்தில் மறைத்து வைத்திருக்கும். அது போல, நீ, போா்க்களத்தில் பகைவா்மீது காட்டும் உன் போா் வலிமையைப் போரல்லாக் காலங்களில் பிறரறியாவாறு நீ, மறைத்து வைத்து அடக்கத்தோடு உள்ளாய். ஆகவே, புலவா்களால் உன் புகழினை எப்படி விளங்கப் பாட இயலும்? இவ்வாறு புலவா் முதுகண்ணனாா் சோழன் நலங்கிள்ளியைப் போற்றிப் புகழ்ந்துள்ளதால் இது பாடாண் திணைக்குப் பொருத்தமானாதாக அமைந்துள்ளன.

**(ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.)** **2x4=8**

**17. இடப்பக்க மூளையில் செய்திகள் பதிவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து சுஜாதாவின் கருத்துகளை விளக்குக.**

❖ இடப்பக்கப் பாதிப்பகுதிதான் பேச, எழுத, கணக்கிட தா்க்க ரீதியில் சிந்திக்கப் பயன்படுகிறது.

❖ மிகுந்த மதிப்பெண் பெறுதல், பிரச்சினைகளை அலசி ஆராய்தல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறந்து விளங்குதல் ஆகியனவெல்லாம் இடப்பக்கப் பாதிப்பகுதியில் செல்வாக்கால்தான் அமைகின்றன. நம் மொழியறிவுக்கு காரணமாக இருப்பது இடப்பக்கத்தில் உள்ள மூளையேயாகும்.

❖ இடப்பக்க ஆக்கிரமிப்பு அதிகம் உள்ளவா்கள் பட்டயக்கணக்கா்களாகவும் கணக்கு ஆசிரியா்களாகவும், இந்திய ஆட்சிப்பணிக்குப் படித்தவா்களாகவும், வருமானவரி அதிகாரிகளாகவும் இருப்பா்.

**18. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமாசாமி கூறுவன யாவை?**

❖ ஜீவா மேடையில் பேசும்போது வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைத்திடும் அழகும் புதுமையும் நளினமும் மிக்கவை ஆகும்.

❖ பேச்சுக்கலைபற்றி எழுதப்பட்ட புத்தகங்களில் கூறப்பட்டுள்ள விதிகளை ஜீவா ஒருபோதும் பின்பற்றயதில்லை.

ஸ்ரீ வித்யபாரதி

- ❖ ஜீவா, யாரையும் பின்பற்றி, அந்தப் பாணியில் பேச மாட்டார்; தமது பேச்சுக்கலையை அவர் பிறரிடம் கற்றதும் இல்லை.
- ❖ நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து பேசியவர். அவர் பேசும் விஷயத்தைத் கலைநோக்கத்தோடும் கற்பனைத் திறத்தோடும் வெளிப்படுத்தி வெற்றி கண்டார்.

19. **“சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்” - இக்கூற்றை உங்கள் பாடப்பகுதி வழியாக மெய்ப்பிக்க.**

- ❖ சித்தர்கள், தமிழச் சமுதாயத்தில் நிலவிய கண்மூடிப் பழக்கவழக்கங்களைக் கடுமையாக எதிர்த்தார்கள். மூடநம்பிக்கைகளையும் பொருளற்ற செயல்களையும் போலிச் சடங்குகளையும் நெஞ்சுறுதியோடும் நேர்மைத் திறத்தோடும் சாடினார்கள்.
- ❖ தமிழ்ச்சமூகத்தைப் பீடித்து கொண்டுள்ள நோயாக அமைந்திருக்கும் சாதிக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதைத் தங்களது பாடல்களில் வெளிப்படுத்தியவர்கள், சித்தர்கள்.
- ❖ ‘சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?’ என்று சிவவாக்கியர் சினமொழி பேசுகிறார். ‘சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்’ என்று பாம்பாட்டிச்சித்தரும் கொதிப்புற்றுப் பேசுகிறார்.
- ❖ ‘ஆதிக் கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்’ என்று பத்திரகிரியார் பாடுகிறார். கபிலர் சாதியத்தைக் கடுமையாகச் சாடியவர். அவருடைய வழிகாட்டலில் சாதிவகை இல்லாமல் வாழ்வது எக்காலம் என்ற கேள்வியைப் பத்திரகிரியார் எழுப்புகிறார். இவ்வாறு சமூகம் குறித்த அக்கறையுடன் சித்தர்கள் செயல்பட்டனர் என்பதை அறியமுடிகிறது.

**IV. அ) நெடுவினா(எவையேனும் இரண்டுக்கு விடையளி) 2x6=12**

**20. கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம் வழி விரிவாக எழுதுக.**

அர்ச்சுனனின் அம்புகளால் வீழ்த்தப்பட்டுத் தேரின்மீது வீழ்ந்த கன்னனிடம், கண்ணபிரான் வேதியர் வடிவில் சென்றார். கன்னன் செய்த ஈகையால் பெற்ற புண்ணியங்கள் யாவற்றையும் பறித்துக்கொள்ளும் நோக்கத்தில் சென்ற கண்ணன், கன்னனைப் புகழ்ந்து பேசத் தொடங்கினார்.

ஸ்ரீ வித்யபாரதி

**கண்ணன் இரந்து நிற்றல்:**

குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைக் கொண்ட சூரியனின் தோன்றலே, கடல் சூழ்ந்த இந்த உலகில் வறுமையால் தளர்ச்சியடைந்தவர்களுக்கு வேண்டியதைத் தரும் வள்ளல் நீ எனக் கேள்விப்பட்டேன். மேரு மலையில் தவம் செய்த நான் வறுமையால் துன்பமடைந்தேன். இப்போது உன்னால் இயன்றதை எனக்குத் தருவாயாக என்று கன்னனிடம் வேதியர் வடிவத்தில் இருந்த கண்ணன் இரங்கினான்.

**யாது வேண்டும்?:**

வேதியன் அவ்வாறு கேட்டதும், வீழ்ந்து கிடந்த கன்னன், 'என்னால் தரத்தகுந்த பொருளை நீர் உரைப்பீர்' என்று கன்னன் கூறினான். அதைக்கேட்ட நான்கு வேதத்தவனாகிய கண்ணன், 'நின் புண்ணியம் அனைத்தும் எனக்கு அளித்து உதவுக' என்றான். வேதியனின் கோரிக்கையைக் கேட்ட கன்னன் உள்ளம் மகிழ்ந்தான்.

**புண்ணியம் பெறுக:**

வேதியனின் மொழி கேட்டு மகிழ்ந்த கன்னன், 'என் உயிர் கலங்கியுள்ளது. இரந்து வருபவர்களுக்கெல்லாம் நான் வாரிக் கொடுத்த காலத்தில் நீ வரவில்லை; இதுவரை முடிவில்லாமல் நான் செய்யும் புண்ணியம் அனைத்தும் தருகிறேன். நீ பெற்றுக்கொள்வாயாக. உனக்கு நான்முகனும் ஒப்பாகான் என்றால், என் புண்ணியம் அதைவிடப் பெரிதா? என வினவினான் கன்னன்.

**தாரை வார்த்துக் கொடு:**

வேதியனாய் வந்த கண்ணனைக் கன்னன் வணங்கினான். தன்னை வணங்காதவர்களுக்குப் பேரிடியாய் விளங்கும் கண்ணன், 'நீருடன் தானம் செய்க' என்றான். தன் மார்பில் தைத்திருந்த அம்பின் வழியாகத் தன்னுடலில் இருந்து கொட்டிக்கொண்டிருந்த குருதியோடு சேர்த்து, 'புண்ணியம் அனைத்தையும்' தாரை வார்த்துக் கொடுத்தான் கன்னன். முன்பு ஒரு நாள் மாவலிச் சக்கரவர்த்தியிடம் வாமனனாக வந்து மூன்றடி மண் தானம் பெற்று, மூவடிகளால் உலகத்தை அளந்த கண்ணன், தன் உள்ளங்கையில் குருதியை ஏற்றான்.

**இல்லையெனாத உளம் கொடு:**

கன்னனிடமிருந்து புண்ணியங்களைத் தானமாகப் பெற்ற கண்ணன், நீ வேண்டும் வரங்களைச் சொல்லுக' என்றான். சூரிய புத்திரனாகிய கன்னன், 'இன்னும் எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனை பிறவியிலும் இரந்து வருவோர்க்கு இல்லை என்று உரையாத உள்ளம் வேண்டும்' என்று கேட்டான்.

ஸ்ரீ வித்யபாரதி

**வீடுபேறும் பெறுக:**

கன்னனின் வரத்தைக் கேட்ட மும்மூர்த்திகளில் ஒருவராகிய கண்ணபிரான் உள்ளம் மகிழ்ந்து, அவனைத் தழுவிக் கொண்டு, கண்களில் நீர் பெருக்கினான். 'கன்னா! நீ எத்தனை பிறவி எடுத்தாலும் கொடை செய்வதையும் அதற்கான செல்வத்தையும் எய்துவாய். முடிவில் இறைவனுடைய திருவடியாகிய வீடுபேறும் பெறுவாய்' என்று வாழ்த்தினான்.

இவ்வாறு கண்ணன் கன்னனிடம் இரந்து நின்ற நிகழ்வினை வில்லிபாரதம் காட்சிப்படுத்துகிறது.

**(அல்லது)**

**'அறிவியல் சிந்தனைகள் நிரம்பிய காப்பியம் நீலகேசி' இக்கருத்தினை நும் பாடப்பகுதி வாயிலாய் ஆராய்க**

- **சமயவாதமா, அறிவியல் வாதமா?' :** நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. அதில் சமண சமயத்தைச் சார்ந்த நீலகேசியோடு புத்த மதத்தைச் சார்ந்த மொக்கலன் வாதிடும் பகுதி உள்ளது. இருவேறு சமயத்தைச் சார்ந்த அவர்களின் கருத்துமோதல்கள் இன்றைய அறிவியல் சிந்தனைகளை அன்றே நம் முன்னோர்கள் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்தும் போது நம் நெஞ்சில் வியப்பும் விம்மிதமும் பெருகுகின்றன.
- **தாவரவியல் அறிவு!:** வாதத்தின் போது, தாவரங்களுக்கு உயிரில்லை என வாதிட்டான், மொக்கலன். அதனை மறுத்து நீலகேசி கூறும் கருத்துகள், அன்றே தாவர அறிவு மேலோங்கியிருந்ததை வெளிப்படுத்துகின்றன.
- நீலகேசி, 'தொட்டாற்சுருங்கியும் சுண்டிலும் எவையேனும் தம்மைத் தீண்டினாலும் கல்கொண்டு எறிந்தாலும் சற்று நேரம் மலர்ச்சி குன்றி மயங்கி இருக்கும்; சிறிது நேரம் கழிந்ததும், அவை மயக்கம் நீங்கப்பெற்று முன்பு கொண்டிருந்த மலர்ச்சியைப் பெற்றுத் திகழும். ஆனால், தீயில் இட்டால் சுருள்கின்ற பழத்தோல் தொட்டாற்சுருங்கி, சுண்டில் ஆகிய தாவரங்களைப் போல் மீண்டும் பழைய நிலையைப் பெறுமா? எது தன்னைத் தீண்டினாலும் அட்டை சுருண்டுகொள்ளும். ஆனால், தோலானது தீ தீண்டினால் அன்றி வேறு எது தீண்டினாலும் அது சுருண்டுகொள்ளுமா? கொள்ளாது. எனவே, தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பது உறுதி." எனக் கூறினாள்.
- இவை இன்றைய தாவரவியல் கருத்துகளோடு ஒத்து அமைந்துள்ளன அல்லவா?
- இயற்பியல் அறிவு! : ஒலி, ஒளி ஆகியன குறித்து நீலகேசி கூறும் உண்மை விளக்கம், ஐம்பூதங்களைப்பற்றி அறியப் பயன்படும் கருவிகளற்ற அக்காலத்திலே எப்படிச் சாத்தியமானது என வியப்புற வேண்டியுள்ளது.
- செவிப்பொறியானது, தன் புலனாகிய ஒலி தன்னிடம் வந்து சேராத போது, தானே சென்று பற்றும் என்று மொக்கலன் கூறினான். உண்மைக்கு மாறான இக்கருத்தை மொக்கலன்

கூறியமையால், நீலகேசி, “நீ பொருளினது இயல்பினை ஆராய்ந்து கண்டவன் அல்லன்” என்கிறான். மேலும் “ஒளியும் ஒலியும் ஒரே காலத்தில் தோன்றும். ஆனால், நாம் அவற்றை ஒரே சமயத்தில் பெறுவதில்லை: ஒளியை முதலில் காண்கிறோம். ஒலியைப் பின்பே கேட்க நேர்கிறது. காரணம், ஒலி, செவியை வந்து சேர்வதற்கு அதிக காலம் எடுத்துக்கொள்வதனால்தான்,” என்று கூறுகிறாள்.

- ❖ மறுமையை நோக்கியே சமயங்கள் இருக்கும் எண்ணத்தைத் தகர்த்து, அவை இம்மைக்கான அறிவியல் பெட்டகமாயும் இருக்கும் என்பதை நீலகேசி நிரூபித்துவிட்டது.

**21. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியினையும் எவ்வாறு உணருகிறீர்கள் என்பதை விவரிக்க.**

பேச்சுமொழி என்பது முன் நிற்கும் ஒருவரை நோக்கியோ, சிலரை நோக்கியோ, பலரை நோக்கியோ, பல்லாயிருக்கணக்கானவரை நோக்கியோ நிகழ்வதாய் இருக்கம், எதிரே இருப்பவர் எத்தனை பேர் என்றாலும் ‘பேச்சுமொழிக்கு’ என்று சில ‘தகுதிகள்’ அமைந்துவிடுகின்றன.

ஒருவர் பேசுகிறார் என்று கருதுவோம். அவர் ‘பேசுவதைக் கேட்பவர், பேசுபவர் என்ன கருத்தை, செய்தியைச் சொல்ல முயல்கிறார் என்பதில்தான் தம் கருதிதைச் செலுத்தவாரே தவிர, அவர் பேச்சில் ஒருமை பன்மை ஒழுங்குற அமைந்துள்ளனவா, கருததைச் சுமந்து வருகின்ற சொற்றொடரிலுள்ள சொற்கள் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளனவா, எழுத்தின் ஒலிப்பு முறை தவறின்றி அமைந்துள்ளதா என்று கவனிக்கமாட்டார்.

ஆனால், எழுத்து வடிவில் ஒரு நூலினைப் படிக்கையில், அந்நூல் என்ன் கூறுகிறது என்பதோடு, எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை ஆகியன இல்லாமல் அமைந்துள்ளனவா என்பதையும் அறிகிறோம். எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை ஆகியன உள்ளனவா என்னும் நோக்கில் நாம் படிக்க முயலாவிட்டாலும், இடறும் கற்கள் போல அவை நமக்குத் தோன்று, படிக்கும் வேகத்தைத் தடை செய்கின்றன.

இங்கொன்றைக் கவனத்தில் இருத்தல் வேண்டும். இலக்கணம், இலக்கியம் கற்ற பெருமக்கள் அறியக்கூடிய செறிவான அரிய சொற்களால் நூல்நடை அமைவதே சிறந்தது என்று கருதுவது தவறு. பலரும் அறிந்த எளிய சொற்களில் நூல்நடை அமைவதே பெரிதும் வரவேற்கத்தக்கது, அது கருத்தைப் பரவலாய் எல்லாரும் அறியச்செய்ய ஏற்ற வழியாகும். மேலும், எழுத்துநடை காலத்தால் அழியாது என்றும் ஏடுகளில் நிலைத்திருக்கும். ஆனால், பேச்சுமொழி:யோ பேசிய அப்பொழுதே காற்றோடு கரைந்து மறைந்துவிடும்.

**(அல்லது)**

**தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாய் நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.**

**முன்னுரை:**

**‘நாட்குறிப்பு’** என்பது, அதை எழுதுபவர் யார் என்பதைப் பொறுத்தே அது பிற்காலச் சமுதாயத்திற்குப் பயனளிப்பதாய் அமையும். எழுதுபவர் சாதாரண மனிதராய்

ஸ்ரீ வித்யபாரதி

இருப்பின், பெரும்பாலும் அஃது அவர் சந்ததியினருக்கு மட்டுமே பயனளிப்பதாய் இருக்கும். ஆனால், நாட்குறிப்பை எழுதியவர் கலைஞர், எழுத்தாளர், அரசியல்வாதி, அரசியல்வாதிகளோடு தொடர்புள்ளவர் என்னும் நிலையில் இருப்பவராயிருந்தால், அவர்கள் எழுதிய நாட்குறிப்பு சமுதாயத்திற்குப் பயனளிக்கும். காரணம், அவர்கள் தொடர்பு கொண்டிருப்போர் சமுதாய வரலாற்று நிகழ்வுகளில் பங்குகொள்பவராய் இருப்பதேயாகும்.

**வரலாற்றை உருவாக்கும் வல்லமை பெற்றோர் தொடர்பு! :**

- ❖ ஆனந்தரங்கர் மிகச் சாதாரண மனிதரே ஆவார். அவர் முதலில், பரங்கிப்பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் துவைக்கும் கிடங்குக்கும் தலைவர் ஆனார்.
- ❖ பின், தம் உழைப்பாலும் உண்மையே உரைக்கும் திறத்தாலும் முன்னேறி, பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே அவர்களிடம் துவிபாஷியாய் பணியாற்றத் தொடங்கினார்.
- ❖ அதனால் வல்லாண்மைமிக்க பிரெஞ்சு ஆட்சியாளர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார்.
- ❖ வரலாற்றை உருவாக்கும் வல்லமை பெற்ற அவர்களால் நிகழும் நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்தார். அன்றாடம் அவற்றைத் தம் நாட்குறிப்பில் பதியத் தொடங்கினார்.
- ❖ பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ், நாணய அச்சடிப்பு உரிமையைப் பெறுவதற்காகச் செலவழித்த பெருந்தொகையை ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் குறித்துள்ளார்.
- ❖ தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர் மீது பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர்ப் போர், தஞ்சைக் கோட்டைமீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியினை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் ஆனந்தரங்கர் திறம்பட எழுதியுள்ளார்.
- ❖ 1758 ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டையை வல்லி முற்றுகை இட்டார். அவர் கோட்டையை இடித்தார்; வீடுகளைத் தரைமட்டமாக்கினார்; மதிலை இடித்து அகழியைத் தூர்த்தார். ஆயினும் அவரால் சென்னைக் கோட்டையைக் கைப்பற்ற இயலவில்லை.
- ❖ இவ்வாறு மிக உயர்ந்த பதவியில் இருப்பாரோடு நெருக்கமுற்றிருந்த ஆனந்தரங்கர், அன்றாடம் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தம் நாட்குறிப்பில் குறித்துக்கொண்டார்.
- ❖ இவை அன்றைய ஆனந்தரங்கருக்குச் சாதாரண செயல்களாய் இருந்திருக்கலாம். ஆனால், அவை 25 ஆண்டு காலத் தென்னிந்திய வரலாற்றினை வெளிப்படுத்தும் புதையலாகும்; அக்காலத்திய பிரெஞ்சு அரசுபற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலம்; ஆவணம்; ஏன், சிறந்த இலக்கியமுமாகும்.

ஸ்ரீ வித்யபாரதி

**முடிவுரை:**

தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்திய ஆனந்தரங்கன் 12.01.1761 ல் மறைந்தார். அந்தக்காலத்தில் நடந்த அனைத்துச் செய்திகளையும் ஒன்றுதவறாமல் நல்ல பாஷையில் எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர் என்று மகாகவி பாரதி கூறுவத முற்றிலும் உண்மையானது.

**ஆ) அடிபிறழாமல் எழுதுக.** **4 +2= 6**

**22.** அ) **நீலகேசி**

உற்றில வாய்ஒலி கொள்ளும் செவியென ஓதுகின்றாய்
கற்றிலை மெய்ம்மைநீ கட்புலம் தன்னோடுஓர் காலத்தினால்
பெற்றில நாம்அதன் பின்கொளல் தானும் பெருந்தவத்தாய்
மற்றிது தான்தன் பொறியுது காறும் வரலின் அன்னே
- ஆசிரியர் யார் என அறியப்படவில்லை

ஆ) "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து"

**பகுதி – ஆ**

**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)**

**V. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **8x1=8**

**23.** அ) வினை

**24.** இ) ஓடியவன்

**25.** இ) முனி + வ் + இல் + அர்

**26.** ஈ) சிம்பொனித் தமிழர் - ஏ. ஆர். ரஹ்மான்

**27.** இ) ளள வேற்றுமையில் வலி வரின் றடவும்

**28.** ஆ) ஈற்றுப்போலி

**29.** ஈ) மாமுன் நேர்

**30.** ஆ) பிரபஞ்சன்

**VI.குறுவினா(எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக.)** **7x2=14**

**31. எவையேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.**

| | | |
|---|---|---|
| **அ) அலர்ந்து** | - | **அலர் + த் (ந்) + த் + உ** |
| அலர் | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |



ஸ்ரீ வித்யபாரதி

**ஆ) உண்டான் - உண் + ட் + ஆன்**

உண் - பகுதி

ட் - இறந்தகால இடைநிலை

ஆன் - ஆண் பால் வினைமுற்று விகுதி

**32. எவையேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.**

**அ) உலகனைத்தும்- உலகு + அனைத்தும்**

விதி 1: உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்

விதி 2 :உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**ஆ) சிறுகோல் - சிறுமை + கோல்**

விதி 1 :ஈறுபோதல்

**33. பிறமொழிச் சொற்களை தமிழ்ப்படுத்துக.**

அ) Consumer - நுகர்வோர்

ஆ) Website - இணையதளம்

**34. வல்லினம் மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத்தொடராக மாற்றுக)**

மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை **என்பதால்** மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் **சென்று** சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

**35. பொருத்துக.**

அ) நேரிசை ஆசிரியப்பா - i) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்.

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா - ii)அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்.

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - iii) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்.

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - iv) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்.

**விடை : அ) iii ஆ) i இ) iv ஈ) ii**

**36. மயங்கொலிச்சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

மன **உ**ளைச்சல் தீரவும், வீட்டில் **உ**லை கொதிக்கவும் **உ**ழைக்க வேண்டும்.

**37. வல்லின மெய்களை இட்டு நீக்கியும் எழுதுக.**

அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை_ தீமைகளை**ப்** புரிந்து பேசுவர்.

ஆ) சான்றோர் மிகுந்த_ பொறுப்புடன் சிறப்பான சேவை_ புரிந்து கொள்கையை நிலைநாட்ட**ச்** செய்தனர்.

**38. மரபுப் பிழையை நீக்கி எழுதுக:**

அ) தென்னை **கீற்றால் (ஓலையால்)** கீற்று பின்னுவார்கள்

ஆ) சோளக் **கொல்லைக்குச்** சென்றேன்.

**39. தமிழாக்கம் தருக.**

Education is the most powerful weapon, which you can use to change to world.

கல்வி, வலிமையான ஆயுதம், அதனைப் பயன்படுத்தி இவ்வுலகையே மாற்றலாம்.

## VII.எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3x4=12

**40. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எழுத்தெழுதுக.**

**பா நயம் பாராட்டல்:**

**மையக்கருத்து**

சுதந்திரமே மகிழ்ச்சியையும் பெருமைமிகு வாழ்வையும் இன்பத்தையும் தரும். அறநெறிப்படி வாழ்வதும் புகழோடு வாழ்தலும் சுதந்திரம் இருந்தால்தான் சாத்தியமாகும். துயரங்களை எதிர்த்துப் போராடவும் சுதந்திரம் அவசியம்.

**எதுகை**

அடிதோறும் முதற்சீரின் முதலெழுத்துத் தம்முள் அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

**சான்று** : சு**த**ந்திரம் - ப**த**ம்தரும்; இ**த**ம்தரும் - நி**த**ம்தரும்

**மோனை**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

**சான்று** : **சு**தந்தரம், **சு**கம்தரும், **ப**தம்தரும், **பா**ர்த்தால், **இ**தம்தரும், **எ**ல்லாம், **நி**தம்தரும், **நி**ச்சயம் என மோனைத் தொடை அழகுறப் பயின்று வந்துள்ளது.

**இயைபுத் தொடை**

ஓரடியின் சீர்தோறும் இறுதியில் நின்ற எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றிவரத் தொடுப்பது சீர் இயைபுத் தொடை ஆகும்.

**சான்று** : வேறு**ண்டோ**, கீழன்**றோ** என முடிந்து இயைபுத்தொடை நயம் பெற்று மிளிர்தல் கவிதைக்கு இனிமை சேர்ப்பதாய் உள்ளது.

**அணிநயம்**

சொற்பொருள் பின்வருநிலையணி - கவிதையில் 'தரும்' என்னும் சொல் ஆறு இடங்களில் பயின்று வந்துள்ளது. அது கவிதை இன்பத்தை மிகுவிக்கிறது.

**41. கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.**

பொருளதிகாரம் மக்கள் வாழ்க்கை முறையினை வகுத்துக்காட்டுவதாகும். எழுத்தும் சொல்லும் தமிழ்மொழியின் அமைதியை விளக்குவன. பொருள், அம்மொழி பேசும் மக்களின்- தமிழின் - உயர்ந்த ஒழுக்கத்தினைச் சிறப்பித்துக்காட்டுவதாகும்.

பொருள் என்பது இங்கு அகப்பொருள், புறப்பொருள் என இருபிரிவாகப் பகுத்துக் கூறப்பட்டுள்ளது.

**அகத்திணை என்றால் என்ன?**

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளம் கலந்து ஒன்றுகூடி வாழும் காதல், கற்பு வாழ்வே அகம் எனவும், அகத்திணை எனவும் கூறப்படுகிறது.

**புதிய இலக்கண மரபு !**

மக்கள் வாழ்க்கையில் மேற்கொண்டு ஒழுகிய பல்வேறு நெறிகளுக்கும், அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளுக்கும் தொடர்பு கண்டு, புதிய ஓர் இலக்கண மரபினைத் தோற்றுவித்தவர், தொல்காப்பியரேயாவர்.

**அகப்பொருள் பாகுபாடு**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை ஐந்திணைகளாகப் பகுத்தார்; ஒவ்வொரு திணைக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் பாகுபாட்டையும் அவர் அமைத்தார்.

**முதற்பொருள் என்றால் என்ன?**

முதற்பொருளாவது ஐவகை நிலமும், அவற்றிற்குரிய பெரும்பொழுது, சிறுபொழுதுகளுமாம்.

**கருப்பொருளாவது யாது?**

கருப்பொருளாவது தெய்வம் முதலாய் யாழ் ஈறாய்க் கூறப்பட்ட பதினான்கு பொருள்களாம்.

**உரிப்பொருள் யாவது யாது?**

உரிப்பொருளாவது கூடல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் ஒழுக்கங்களாம்.

**புறம்**

புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலிய பகுதிகளாய்க் கூறப்பட்டுள்ளன. போர்முறையை மட்டுமின்றி வென்றிச்சிறப்பு, ஈகைத்திறம், நிலையாமை உணர்ந்து வீடுபெறும் வழி ஆகியவற்றையும் இப்புறத்திணை நன்கு விளக்குகிறது.

**42. சொற்பொருள் பின்வருநிலையணி**

**அணி இலக்கணம்:**

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலமுறை வருமாறு கூறுவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**சான்று:**

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

ஸ்ரீ வித்யபாரதி

**சான்று விளக்கம்:**

மருத்துவன் நோயாளியிடம் தோன்றியிருக்கின்ற நோய் இன்னது என்பதைக் குறிகளால் ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். பின்பு, அந்நோய் தோன்றுதற்குரிய காரணத்தை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அதன்பின், அந்நோயைத் தீர்க்கும் வழிமுறைகளை ஆராய்ந்து முடிவு செய்து, அம்முறைகள் தப்பாமல் பயன் கொடுக்கும் வகையில் மருத்துவம் செய்தல் வேண்டும்.

**அணிப் பொருத்தம்:**

இக்குறளில் 'நோய்' என்னும் சொல் 'பிணி' என்னும் பொருளிலும் 'நாடி' என்னும் சொல் 'ஆய்ந்து' என்னும் பொருளிலும் அடுத்தடுத்து வந்தமையால் இது சொற்பொருள் பின்வருநிலை அணியாம்.

**(அல்லது)**

**உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாய்த் தந்து விளக்குக.**

**உருவக அணி**

**அணி இலக்கணம்:**

உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடியின்றி உவமையினையே பொருளாகக் கூறுவது உருவக அணி எனப்படும். இதில் உவமேயப் பொருள் முன்னும் உவமைப் பொருள் பின்னும் அமையும்.

**சான்று:**

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**சான்று விளக்கம்:**

வறுமைக்கடலைக் கடக்க ஒருவன் கைக்கொண்ட இரத்தலாகிய காவல் இல்லாத படகு, அதன்கண் செல்லும்போது கரத்தல் என்னும் பாறை தாக்குமாயின் பிளந்துவிடும் என்பதாகும்.

**அணிப் பொருத்தம்:**

இக்குறளில் இரத்தலைப் படகாகவும், கரத்தலைப் பாறையாகவும் உருவகப்படுத்திக் கூறியதால் இ∴து உருவக அணியாகும்.

**43. ஏற்புடைய கவிதை நயத்துடன் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.**

**VIII.பின்வரும் துணைப்பாடப்பகுதி வினாவிற்கு இருபக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக: 1x6=6**

**44. யானை டாக்டர்" கதைவாயிலாய் இயற்கை, உயிரினப்பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**

ஒரு நாட்டின் வளம் காட்டுவளத்தனைப் பொறுத்தே அமையும் என்பர். காடு செழித்தால் நாடு செழிக்கும்.அடர்ந்த காடுகளில் யானை, சிங்கம், புலி, மான் முதலான விலங்குகள் வாழ்கின்றன. பல்வேறு வகையான பறவைகளும் வாழ்கின்றன.

நோய் தீர்க்கும் மூலிகைகள், தேன் போன்றவற்றை நாம் காட்டிலிருந்தே பெறுகின்றோம்.

சந்தனமரம், தேக்கு மரம், மூங்கில் போன்ற அரிய வகை மரங்கள் விளைவதும் காட்டில்தான். அம்மரங்கள் காற்றிலுள்ள தூசை அகற்றித் தூய்மைப்படுத்துகின்றன. தட்பவெப்ப நிலையைச் சமப்படுத்துகின்றன. காட்டிலுள்ள மரங்கள்தான் மேகங்களைக் குளிர்வித்து மழையாகப் பெய்யச் செய்கின்றன.

இப்படிப் பல வகைகளில் நன்மைஅளிக்கும் காட்டை மனிதன் தன் சுயநலத்திற்காக அழித்துக் கொண்டிருக்கிறான். குடியிருப்புகளைக் கட்டும் நோக்கிலும், பலவகை மரப்பொருள்களைச் செய்து பொருளீட்ட வேண்டும் என்னும் கருத்திலும், மனம் போன போக்கில் காட்டிலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்திக்கொண்டிருக்கிறான். ஒரு மரம் வெட்டினால் இரு மரம் வளர்ந்திட நட்டுக் காக்க வேண்டும் என்னும் பொருள் பொதிந்த வாசகத்தை எவரும் மதிப்பதில்லை.

சுற்றுலா செல்வதாய்க் கூறிக்கொண்டு பலர்காட்டில் நுழைந்து, மதுவைக் குடித்துவிட்டு அலட்சியமாய் அதன் குப்பியைத் தூக்கி எறிந்துவிட்டுச் செல்கின்றனர். உடைந்த அக்குப்பியின் பகுதிகள் யானையின் காலில் பதிந்து, நாளடைவில் அதன் உடற்பகுதியிலே தங்கிப் புண் ஏற்படச் செய்து அதற்குப் பெருந்துன்பம் இழைத்துவிடுகின்றன.

எனவே, மண்வளம் காக்கவும், மழைவளம் பெருகவும், தொழில்வளம் சிறக்கவும், உயிரினம் வாழவும், மனிதன் தன் பொறுப்பினை அறிந்து செயல்பட்டால் காடுகள் செழிப்புற்று விளங்கும்.

**(அல்லது)**

**சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

சிம்பொனித் தமிழர் என்று அழைக்கப்படுவர் இசைஞானி என்றும் ராகதேவன் என்றும் கொண்டாடப்படுகின்ற இளையராஜா ஆவார்.

**இசைக்கொடை :** அன்னக்கிளி படத்தில் அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. புதுப்புது மெட்டுகள் இளையராஜாவிடமிருந்து தமிழ்ச் சமூகத்திற்குக் கொடையாகக் கிடைத்தன.

**அனுபவம் இனிது :**

கண்களை மூடிக்கொண்டு இளையராஜாவின் இசையைக் கேட்கும் ஒருவர் அடையும் அனுபவம் புதிதும் இனிமையும் ஆகும். பாடல்களின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் இளையராஜாவின் இசைமேதைமையை நாம் உணர முடியும்.

**இசைச் சங்கமம் :**

பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் மனத்தை மயக்கும் வகையில் கலந்து கொடுத்தவர், இளையராஜா. பொதுமக்கள் நுகரும் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; இளையராஜா கர்நாடக இசையின் பல இராகங்களைத்

ஸ்ரீ வித்யபாரதி

திரையிசையில் அறிமுகப்படுத்தினார். அதனால் திரைமெல்லிசை புதிய உயரங்களைத் தொட்டது.

**செவிகளைத் திருப்பிய இசை :**

1970 களின் தொடக்கத்தில் தமிழ்மக்களின் செவிகள் இந்தி உள்ளிட்ட பிறமொழிப் பாடல்களையே கேட்டுவந்தன. தமிழ்ச்செவிகளைத் தமிழ்பாடல்களை நோக்கித் திருப்பிய பெருமை இளையராஜாவுக்கே உரியதாகும்.

**சாமானியரை ஈர்த்த இசை :**

இசை என்பது மேட்டுக்குடி மக்களின் சொத்தன்று; அஃது எளிய மக்களின் பண்பாட்டு வெளிப்பாடு என்பதை நிறுவியவர், இளையராஜா. திரைப்படப்பாடல்களிலும் பின்னணி இசையிலும் விடுபட்டுப்போயிருந்த வாய்மொழித் தன்மையையும் யதார்த்தத்தையும் கொண்டுவந்த இளையராஜாவின் இசை சாமானியரையும் ஈர்த்தது.

**பண்பாட்டு வெளிப்பாடு :**

இளையராஜா. தமிழ்ச்செய்யுளின் யாப்போசைக் கட்டமைப்புக்குள் இருக்கின்ற இசை ஒழுங்கைப் புரிந்துகொண்டு இசையமைத்தார். ஆகவே, அவர் இசையமைத்த பாடல்கள் செவிக்கு இனிய ‘செவியுணர் கனி’களாக ஆயின; தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாறின.

**ஆஸ்கர் தமிழர் என்று புகழப்படுபவர் இசைப்புயல் என்றும், ஆசியாவின் மொசார்ட் என்றும் பாராட்டப்படும் ஏ.ஆர். இரஹ்மான் ஆவார்.**

**புதிய எழுச்சி :**

1992 ஆம் ஆண்டில் ரோஜா திரைப்படத்தின் இசையமைப்பாளராய்த் தமது பணிகளைத் தொடங்கினார், ஏ.ஆர். இரஹ்மான். இவரது இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சி ஏற்படுத்தியது. தமது முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற பெருமையையும் ஏ.ஆர். இரஹ்மான் பெற்றார்.

**இளையோர் இசையாளுமை :**

தமது துள்ளல் இசைப்பாடல்கள், புதிய இசை ஆக்கங்களால் இந்திய இளைஞர்களின் மனதைத் கொள்ளை கொண்டார், ஏ.ஆர். இரஹ்மான்.

**துள்ளல் இசை நாயகன் :**

தமிழ் யாப்பிலக்கணத்தின் நால்வகைப் பாக்களில் கலிப்பாவின் ஓசை துள்ளல் ஓசையாகும். கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடாக இருக்கும் இந்த துள்ளல் இசைச்சாயல் தமிழ்மக்களின் வாழ்வில் எங்கும் நிறைந்திருப்பது. அதனை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர். இரஹ்மான் தம் இசைக்கோவையில் அதனை உயிர்ப்புடன் கொண்டுவந்தார். அதன் வழியாய்த் தமிழ் இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.

**கனவை இசையாக மொழிபெயர்த்தவர் :**

உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களைத் தம் இசையால் இணைத்தார், ஏ.ஆர். இரஹ்மான். பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக் குறியீடுகளைத்

ஸ்ரீ வித்யபாரதி

தம்முடைய இசையிலே தவழவிட்டார் அவர். இணை வழியில் உலவும் இளைஞர்களின் கனவை இசையாக மொழிபெயர்த்தார்.

**கணினி இசைமேதை :**

நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்தார் ஏ.ஆர். இரஹ்மான். புதிய பாடகர்கள் பலரை அறிமுகம் செய்தார்.

இவ்வாறு சிம்பொனித் தமிழர் இளையராஜாவும், ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். இரஹ்மானும் தமிழிசைக்கு வளம் சேர்த்ததோடு மட்டுமல்லாமல், தமிழர்களின் இசை வரலாற்றில் மாபெரும் அடையாளங்களாய் நிலைத்து நிற்கின்றனர்.

தமிழ்த்துறை
ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
சக்கராம்பாளையம்,அகரம் அஞ்சல், எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 637202.
CELL : 99655-31727, 96775 – 58960.

ஸ்ரீ வித்யபாரதி